தினமணி

## சூடுபிடிக்கும் மாம்பழ சீசன்

First Published : 26 Jun 2012 12:18:30 AM IST



சென்னை, ஜூன் 25: மாம்பழ சீசன் அடுத்த 20 முதல் 25 நாள்களில் முடிவுக்கு வர உள்ளதால் கோயம்பேடு மார்க்கெட்டில் மாம்பழ வியாபாரம் சூடுபிடித்துள்ளது.

இந்த ஆண்டு மாம்பழ சீசன் மார்ச்சில் தொடங்கியது. தொடக்கத்தில் இமாம்பசந்த், பங்கனபள்ளி, மல்கோவா ஆகிய சில ரகங்கள் மட்டுமே கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்தன.

அப்போது வரத்து குறைவாக இருந்ததால் ஒரு கிலோ மாம்பழம் ரூ.100 முதல் 120 வரையில் விற்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஏப்ரல் முதல் மாம்பழங்களின் வரத்து அதிகரித்ததால் விலை குறையத் தொடங்கியது.

தற்போது கோயம்பேடு மார்க்கெட்டில் பல்வேறு ரக மாம்பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. விலையும் பெருமளவு குறைந்துள்ளது.

திங்கள்கிழமை நிலவரப்படி பங்கனபள்ளி, மல்கோவா (கிலோவில்) ரூ.30-40, நீலம், ரூமானி ரூ. 25-35, பெங்களூரா, செந்தூரா, சக்கரகட்டி ரூ.20-30 விலைக்கு விற்கப்படுகின்றன.

மாம்பழ சீசன் இன்னும் 20 நாள்களில் முடிவுக்கு வரும். அதைத் தொடர்ந்து மாம்பழங்கள் படிப்படியாக வரத்து குறைந்து விலை மீண்டும் அதிகரிக்கும். இதனால் தற்போது மாம்பழ விற்பனை சூடு பிடித்துள்ளது என கோயம்பேடு அனைத்து பழ வியாபாரிகள் சங்கத் தலைவர் பழக்கடை ஜெயராமன் கூறினார்.

நாவல் பழம் விலை குறைவு: மருத்துவக் குணம் நிறைந்த தரமான நாவல் பழம் கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த ஒரு மாதமாக விற்கப்பட்டு வருகிறது. சீசன் தொடங்கிய நேரத்தில் ஒரு கிலோ ரூ.100 முதல் 120 வரை விற்கப்பட்டு வந்த நாவல் பழம், வரத்து அதிகரித்துள்ளதால் தற்போது ஒரு கிலோ ரூ.70 முதல் ரூ.80 வரை விற்கப்படுகிறது.

## 2.5 கிலோ குண்டு மாங்காய்!

First Published : 26 Jun 2012 12:20:54 AM IST



காங்கயம், ஜூன் 25: காங்கயம் அருகேயுள்ள ஒரு தோப்பில் 2.5 கிலோ எடையில் பெரிய மாங்காய் காய்த்துள்ளது.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகேயுள்ள மறவபாளையத்தைச் சேர்ந்தவர் சோமசுந்தரம். இவருக்குச் சொந்தமான மாந்தோப்பில் வழக்கத்திற்கு மாறாக, பெரிய அளவிலான மாங்காய் காய்த்துள்ளது. அதை எடை போட்டுப் பார்த்ததில் இரண்டரை கிலோ எடை இருப்பது தெரியவந்தது. இந்த அதிசய மாங்காயை அக்கம்பக்கத்தினர் திரண்டு வந்து அதிசயமாகப் பார்த்துச் சென்றனர். சோமசுந்தரம் எந்தவிதமான செயற்கை உரங்களையும் பயன்படுத்தாமல், இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ஏற்காட்டில் வலம் வந்த யானைகள்!

First Published : 26 Jun 2012 12:23:16 AM IST



சேலம்-ஏற்காடு அடுத்த தலைச்சோலை பகுதியில் திங்கள்கிழமை முகாமிட்ட காட்டு யானைகள்.

ஏற்காடு, ஜூன் 25: சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக உலாவி வரும் 6 யானைகள் ஏற்காட்டில் திங்கள்கிழமை முகாமிட்டன.

ஏற்காடு அடிவாரத்தில் உள்ள கருங்காலி வனப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை முழுவதும் முகாமிட்டிருந்த யானைகள், இரவில் அங்கிருந்து ஏற்காடு மலைக்குச் சென்றன.

மக்கள் நெருக்கம் மிகுந்த சேலம் மாநகருக்குள்ளும், ஏற்காடு மலையிலும் சென்றுவிடக் கூடாது என்பதற்காக மாவட்ட வன அலுவலர் சுகிர்தராஜ் கோயில்பிள்ளை தலைமையிலான வனத் துறையினர் கடுமையாகப் பணியாற்றினர்.

யானைகளை டேனிஷ்பேட்டை நோக்கி விரட்டுவதற்காக வெடிகள், சக்தி வாய்ந்த விளக்குகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இவற்றையும் மீறி மலை மீது சென்ற யானைகள் மூங்கில்தோப்பு என்ற இடத்தில் சேலம்- ஏற்காடு மலைப் பாதையை அடைந்தன. பின்னர், அங்கிருந்து தனியார் எஸ்டேட்டுக்குள் புகுந்து 13-வது கொண்டை ஊசி வளைவுப் பகுதிக்கு வந்தன.

அதைத் தொடர்ந்து, மலைக்குச் செல்லும் தார்ச்சாலையிலேயே நிதானமாக நடந்து சென்று ஏற்காடு ஏரி பகுதியை அதிகாலை ஒரு மணியளவில் சென்றடைந்தன. ஏராளமான வனத் துறை, காவல் துறை அதிகாரிகள், ஊழியர்கள் யானையைப் பின்தொடர்ந்து சென்றனர்.

ஏரி அருகே ஓய்வெடுத்த யானைகள், தண்ணீர் அருந்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பலாப்பழ வாசத்தால் ஈர்க்கப்பட்டன. இதையடுத்து யானைகள் ஏற்காடு ரவுண்டானா பகுதிக்குச் சென்றன.

அண்ணா பூங்காவின் ஓரத்தில் விற்பனைக்காக சுசீலா என்ற வியாபாரி சுமார் 300 பலாப் பழங்களை குவித்து வைத்திருந்தார்.

அவற்றை மூடியிருந்த தார்ப்பாயை விலக்கிய பெண் யானை, பலாப் பழங்களை தனது கூட்டத்தினருக்காக தள்ளிவிட்டது. சுமார் ஒரு மணி நேரத்தில் 50-க்கும் மேற்பட்ட பழங்களை எடுத்து காலில் மிதித்து பின்னர் துதிக்கையில் எடுத்து ரசித்து உண்டன.

பின்னர், பஸ் நிலையம் நோக்கிச் செல்ல முயன்ற யானைகளை வெடிவைத்து மிரட்டி பெட்போர்ட் சாலை வழியாக விரட்டினர். அங்கிருந்து பக்கோடா பாயிண்ட் என்ற சுற்றுலாப் பயணிகளுக்கான காட்சி முனை பகுதியில் சிறிது நேரம் தங்கின.

பின்னர், புதிய சுற்றுலாத் தலமான தலைச்சோலை, அண்ணாமலையார், முனியப்பன் கோயில்கள் உள்ள இடத்துக்குச் சென்றன.

சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவு மலைப் பாதையில் நடந்து வந்ததால் கூட்டத்தில் இருந்த குட்டி யானை மிகவும் களைப்படைந்து இருந்தது. இதையடுத்து, அங்குள்ள தனியார் காபி எஸ்டேட்டில் புகுந்து திங்கள்கிழமை மாலை 4 மணி வரை ஓய்வு எடுத்தன. வனத் துறையினரும் அவற்றை விரட்டாமல் ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

மாலைக்குப் பிறகு பிலாத்தூர், கொட்டச்சேடு பகுதியை நோக்கிப் புறப்பட்டன. இந்த யானைகள் கூட்டத்தை போட்டுக்காடு, பில்லேரி, முள்ளிக்காடு பகுதியாக மலையில் இருந்து இறக்கி,

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வாணியாறு அணைப் பகுதியில் உள்ள வனத்துக்கு விரட்ட அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

## வேளாண் பல்கலை. கலந்தாய்வு ஜூலை 2-ல் தொடக்கம்

First Published : 26 Jun 2012 01:56:39 AM IST

கோவை, ஜூன் 25: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை பட்டப் படிப்புகளுக்கான முதல் கட்ட கலந்தாய்வு ஜூலை 2-ம் தேதி தொடங்குகிறது.

முதல் நாள் கலந்தாய்வில் 199.25 முதல் 193.50 வரை கட் ஆஃப் மதிப்பெண்கள் பெற்ற 327 மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். இதுதொடர்பாக, பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) ஆ.ராஜராஜன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 13 இளநிலை பட்டப் படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான முதல் கட்ட கலந்தாய்வுக் கூட்டம் ஜூலை 2-ம் தேதி தொடங்கி ஜூலை 8-ம் தேதி வரை நடைபெறுகிறது. பொதுப் பிரிவு தரப்பட்டியலை இணையதளத்தில் (ஜ்ஜ்ஜ்.ற்ய்ஹன்.ஹஞ்.ண்ய்) பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

கலந்தாய்வு நடைபெறும் நாள் மற்றும் கட் ஆஃப்

மதிப்பெண், மாணவர் எண்ணிக்கை விவரம்:

ஜூலை 2: காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 199.25- 195.25. மாணவர் எண்ணிக்கை 159. பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 195.00- 193.50. மாணவர் எண்ணிக்கை 168.

ஜூலை 3: காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 193.25- 192.00. மாணவர் எண்ணிக்கை 166. பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 191.75- 190.75. மாணவர் எண்ணிக்கை 185.

ஜூலை 4: காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 190.50- 189.75. மாணவர் எண்ணிக்கை 153. பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 189.50- 188.50. மாணவர் எண்ணிக்கை 179.

ஜூலை 5: காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 188.25- 187.50. மாணவர் எண்ணிக்கை 160. பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 187.25- 186.50. மாணவர் எண்ணிக்கை 161.

ஜூலை 6: காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 186.25- 185.50. மாணவர் எண்ணிக்கை 155. பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 185.25- 184.50. மாணவர் எண்ணிக்கை 163.

ஜூலை 7: காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 184.25- 183.50. மாணவர் எண்ணிக்கை 162. பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 183.25- 182.50. மாணவர் எண்ணிக்கை 178.

ஜூலை 8ம் தேதி நடைபெற உள்ள கலந்தாய்வில் எஸ்சி, எஸ்சிஏ, எஸ்டி, மற்றும் சிறுபான்மையினர் (பிசிஎம்) பிரிவினர் மட்டும் கலந்து கொள்வார்கள்.

காலை 9.30; கட் ஆஃப் மதிப்பெண் 182.25- 174.50. மாணவர் எண்ணிக்கை 188.

பகல் 1.30; கட் ஆஃப் மதிப்பெண் 174.25- 170 -சிறுபான்மையினர்; 169.25- எஸ்சி, 166.25- எஸ்சிஏ, 159.25- எஸ்டி. மாணவர் எண்ணிக்கை 188.

முதல் கட்ட கலந்தாய்வில் மொத்தம் 2,365 மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். தகுதியுடைய மாணவர்களுக்கு கலந்தாய்வுக்கான தகவல் கடிதம் விரைவு தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. கடிதம் கிடைக்கப் பெறாத, மேற்குறிப்பிடப்பட்ட கட் ஆஃப் மதிப்பெண்ணைக் கொண்ட தகுதியான மாணவர்கள் குறிப்பிட்ட நாள்களில் கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம்.

கலந்தாய்வுக் கூட்டத்திற்கு, சான்றிதழ்களின் நகல்களை (மேல்நிலைப் பள்ளி, 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், சாதிச் சான்றிதழ்) எடுத்துவர வேண்டும். தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள், திரும்பப் பெற இயலாத கலந்தாய்வு மற்றும் மாணவர் சேர்க்கை கட்டணமாக பொதுப் பிரிவினருக்கு ரூ. 2,000-ம், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு ரூ. 1,000ம் ரொக்கமாக கலந்தாய்வு தினத்தன்றே செலுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு மானியத்துடன் இலவச நுண்ணீர் பாசனத் திட்டம்: அதிகாரி தகவல்

First Published : 25 Jun 2012 09:42:48 AM IST

ராமநாதபுரம், ஜூன் 24: தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குமானியத்துடன் கூடிய இலவச நுண்ணீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுவதாக தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் என்.கோவிந்தராஜன் சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இலவச நுண்ணீர்ப் பாசனத்திட்டம் செயல்படுத்தப்பட்டு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதம் மானியத்துடனும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் மானியத்துடனும் வழங்கப்படுகிறது.

சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 43816 வரை மானியம் பெறலாம். குறுவிவசாயிகள் அதிகபட்சமாக இரண்டரை ஏக்கர் வரையிலும், சிறு விவசாயிகளாக இருந்தாலும் 5 ஏக்கர் வரையிலும் பயன் பெறலாம்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் வட்டாட்சியரிடமிருந்து சிறு,குறு விவசாயி என்பதற்கான சான்றிதழ் முக்கியமாக பெற வேண்டும். அவரவர்கதுரிய நிலத்தின் சிட்டா, அடங்கல், வரைபடம், மண்நீர் பரிசோதனை அட்டை ஆகியனவும் சமர்ப்பிக்க வேண்டும். கிணறு, போர்வெல் ஆகியனவும் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் தென்னை, சப்போட்டா, மா, நெல்லி முதலான பல்லாண்டு பயிர்கள், அனைத்து தோட்டக்கலைப் பயிர்கள், காய்கறிகள்சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறலாம்.

தென்னை விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி சொட்டு நீர்ப் பாசனம் மூலம் நீர்ப்பாசனம் செய்து அதிகமான மற்றும் தரமான மகசூலையும் பெற்று பயன் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு வேளாண் விரிவாக்க மையம் தோட்டக் கலைத் துறையை அணுகிடுமாறும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**விதை கிடைக்காமல் தோட்ட பயிர் விவசாயிகள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2012,02:50 IST

திருத்தணி: தோட்டப் பயிர்கள் செய்யும் விவசாயிகளுக்கு, கடந்த, இரண்டு மாதங்களாக, காய்கறி விதைகள் மற்றும் மானியம் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

திருத்தணி ஒன்றியம், வி.கே.ஆர்.புரம், கொத்தூர், ராமகிருஷ்ணாபுரம் உள்ளிட்ட, 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள, 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், காய்கறி தோட்டம் பயிர் செய்து வருகின்றனர். மிளகாய், வெண்டை, கீரை, தர்ப்பூசணி, கத்திரிக்காய் மற்றும் வீரிய ஒட்டு ரக பயிர்கள் செய்கின்றனர். விவசாயிகளுக்கு தேவையான காய்கறி விதைகளை, திருத்தணி தோட்டக்கலை அலுவலகம் மூலம் அரசு மானியத்துடன் வழங்கப்பட்டு வந்தது.

மானியத்தில் விதைகள்: காய்கறி பயிரிடும் சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியமும், சொட்டுநீர் பாசனத்திற்கு, 75 சதவீதம் மானியம் மற்றும் மா செடிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மானியத்துடன், தோட்டக்கலைத் துறையினர் விதைகள் வழங்குவதால், விவசாயிகள் ஆர்வத்துடன் வாங்கி பயிர் செய்கின்றனர்.

தட்டுப்பாடு: இரண்டு மாதங்களாக, விவசாயிகள் காய்கறி விதைகள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். தினமும், திருத்தணி தோட்டக்கலை அலுவலகத்திற்கு வந்து, விதை கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர். சரியான நேரத்தில், விதைகள் கிடைக்காததால் விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறி விடுகின்றனர். இதுகுறித்து, தோட்டக்கலை உதவி இயக்குனர் ஒருவரிடம் கேட்ட போது, ""2011-12ம் ஆண்டு உயர் தொழிற்நுட்ப திட்டத்தின் கீழ், டிசம்பர், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில், விவசாயிகளுக்கு தேவையான விதைகளை மானியத்துடன் வழங்கினோம். ஏப்ரல் 13 முதல்,மே 7ம் தேதி வரை, உழவர் பெருவிழா

கிராமங்கள் தோறும் நடத்தி வந்தோம். விழா ஏற்பாடுகளை கவனித்து வந்ததால், தேவையான விதைகள் பட்டியல் தயாரித்து, சென்னை சேப்பாக்கம் தோட்டக்கலைத்துறை உதவி ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்ப இயலவில்லை. இதனால், விதைகள் எங்களுக்கு கிடைக்கவில்லை. தற்போது, விதைகள் எவ்வளவு தேவை என, பட்டியல் தயாரித்து வரும் வாரத்தில் அனுப்பி, ஆடிப் பட்டத்திற்குள் விதைகள் மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படும்," என்றார்.

## எள் விலை கூடுதலால் விவசாயிகள் மகிழ்ச்சி : மார்க்கெட் கமிட்டிக்கு வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2012,02:10 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் எள் விளைச்சல் அமோகம் மற்றும் கூடுதல் விலையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் எள், உளுந்து, பச்சை பயிறு, பனிப்பயிறு உள்ளிட்ட பயறு வகைப் பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுகின்றன. இருப்பினும் கடந்த இரண்டாண்டிற்கு முன் உளுந்து விலை ஒரு மூட்டை (80 கிலோ) 6 ஆயிரம் ரூபாய் வரை விலை போனது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் மற்ற பயிறு வகைகளைக் காட்டிலும் கடந்தாண்டு அதிக பரப்பளவில் உளுந்து சாகுபடி செய்தனர். பருவ மழையும் சரியான நேரங்களில் தேவையான அளவு பெய்ததால் உளுந்து விளைச்சல் அமோகமாக இருந்தது. ஏக்கருக்கு 8 முதல் 10 மூட்டை வரை விவசாயிகள் மகசூல் செய்தனர்.

இருப்பினும் விவசாயிகள் மார்க்கெட் கமிட்டிகளுக்கு விற்பனைக்கு கொண்டு வந்த போது ஒரு மூட்டை உளுந்து 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 500 வரை மட்டுமே விலை போனது. இதனால் கலக்கம் அடைந்த பல விவசாயிகள் இருப்பு வைத்து விற்பனை செய்ய திட்டமிட்டனர். இருப்பினும் கடந்த ஜனவரி முதல் தற்போது வரை உளுந்து விலையில் எவ்வித மாற்றமும் இல்லை. இதனால் ஏமாற்றம் அடைந்து விவசாயிகள் இருப்பு வைத்திருந்த உளுந்தையும் தற்போது குறைந்த விலைக்கே விற்பனை செய்து வருகின்றனர்.

ஆட்கள் கூலி உயர்வு மற்றும் ஆட்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த மாசிப் பட்டத்தில் (ஏப்ரல் பட்டம்) எள் விதைப்பில் அதிக ஆர்வம் செலுத்தினர். இப்பட்டத்தில் விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு ஏற்ற வகையில் சிகப்பு எள், எட்டு பட்டை எள், வெள்ளை எள், கூர் கறுப்பு எள் மற்றும் சாதா கறுப்பு எள் உள்ளிட்ட வகைகளை விதைப்பு செய்தனர். எள்ளிற்கு ஏற்ற நல்ல பருவ நிலை இருந்ததால் அனைத்து இடங்களிலும் ஏக்கருக்கு 6 மூட்டை முதல் 8 மூட்டை வரை (80 கிலோ) எள் அறுவடை செய்யப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் சாகுடி செய்யப்படும் அனைத்து வகை எள்ளிலும் எண்ணெய் பிழிதிறன் அதிகமாக உள்ளது. இதனால் இவற்றை வாங்கிச் செல்ல விருது நகர் உள்ளிட்ட, மாநிலத்தின்

பல்வேறு பகுதிகளிலிருந்து தாவர எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் இங்கேயே தங்கி எள் கொள் முதல் செய்வதில் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.
இவ்வாறு எண்ணெய் ஆலை உரிமையாளர்களே நேரடியாக கொள் முதல் செய்வதால் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கடந்த ஏப்ரல் மாதத்தில் 3 ஆயிரத்து 700 ரூபாய் முதல் 3 ஆயிரத்து 800 ரூபாய் வரை விலை போன எள், தற்போது மார்க்கெட் கமிட்டிகளில் ஒரு மூட்டை 5 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கூடுதல் சாகுடி மற்றும் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பச்சை மிளகாய் வரத்து சரிவால் விலை கிடு கிடு**

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2012,05:53 IST

சேலம்: தமிழகத்தில் பச்சை மிளகாய்க்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால், விலை உயர்ந்துள்ளது.தமிழகத்துக்கு தேவையான பச்சை மிளகாய், சேலம் மாவட்டம் மேச்சேரி, வாழப்பாடி, பனமரத்துப்பட்டி, தேனி, விருதுநகர், சிவகங்கை, ஓசூர், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் இருந்து, காய்கறி மார்க்கெட்டுக்களுக்கு விற்பனைக்கு வருவது வழக்கம்.ஆனால், நடப்பாண்டின் பச்சை மிளகாயின் விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லாததால், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் மிளகாயின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஆந்திர மாநிலம் கடப்பா, ராஜமுந்திரி, கர்நாடகா மாநிலம் தாவனிக்கரை ஆகிய இடங்களில் இருந்து, சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த பச்சை மிளகாயின் வரத்திலும் சரிவு ஏற்பட்டுள்ளது.கடந்த வாரம் வரை, ஆந்திரா, கர்நடகா மாநிலங்களில் இருந்து தினம் தோறும், ஏழு முதல் 12 லாரிகளில் தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த பச்சை மிளகாயின் வரத்து, தற்போது இரண்டு முதல் நான்கு லாரிகளாக குறைந்து விட்டது.

இதன் காரணமாக பச்சை மிளகாயின் விலை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை, தமிழகத்தின் உழவர்சந்தைகளில் கிலோ, 17 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட பச்சை மிளகாய் நேற்று ஒரே நாளில் கிலோவுக்கு, 25 ரூபாய் வரை உயர்ந்து, கிலோ 43 ரூபாய் முதல், 47 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.வெளி மார்க்கெட்டில் கிலோ, 22 ரூபாய்க்கு விற்ற பச்சை மிளகாய் விலையில் மூன்று மடங்கு உயர்வு ஏற்பட்டு நேற்று கிலோ, 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. பச்சை மிளகாயின் வரத்து எதிர்பார்த்த அளவு இல்லாததால் இதன் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தமிழகம்,கேரளாவில் முட்டைவிலை 328 காசாக நிர்ணயம்

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2012,05:30 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 328 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கோழிப்பண்ணையாளர் மத்தியில் மகிழச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 326 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 2 காசுகள் உயர்த்தி, 328 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை ஏற்றம் கோழிப்பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம்:சென்னை 335 காசுகள், பெங்களூரு 325 காசுகள், மைசூர் 326 காசுகள், ஹைதராபாத் 303 காசுகள், மும்பை 334 காசுகள், விஜயவாடா 307 காசுகள், கொல்கத்தா 350 காசுகள், பார்வாலா 299 காசுகள், டில்லி 310 காசுகள்.இவ்வாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை 50 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை 6 ரூபாய் சரிந்து 70 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## நம்பிக்கையாக நாற்று நட்டு, களையெடுக்கும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2012,04:26 IST

கோபிசெட்டிபாளையம்:பவானிசாகர் அணை நீர்மட்டம் கடுமையாக சரிந்து, முறை நீர்ப்பாசனம் அமலில் உள்ள நிலையில், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் களை எடுக்கும் பணி தீவிரமாக நடக்கிறது.ஈரோடு மாவட்டத்தின் மிகப்பெரிய அணையாக உள்ள பவானிசாகர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர், கோபியை அடுத்த கொடிவேரி அணையில் தேக்கி வைக்கப்பட்டு, அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனத்துக்கு திறக்கப்படுகிறது. இவ்விரு பாசனம் மூலம், 24 ஆயிரம் நிலம் பாசன வசதி பெறுகிறது. முதல்போக சாகுபடிக்காக ஏப்ரல் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு உட்பட்ட கோபி மற்றும் டி.என்.பாளையம் யூனியன்களில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெற்பயிர் நாற்று நட்டு, 15 நாள் பயிராக வளர்ந்து நிற்கிறது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடுமையாக சரிந்துள்ள

நிலையில், பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையுடன், களை எடுக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சென்றாண்டு நெற்கதிர்களை தண்டுப்புழு தாக்கியதால், நெல் வயலில் ஒரு பகுதியில் பச்சை நிறமாகவும், ஒரு பகுதி வெளிர் நிறமாகவும் மாறியது. தண்டுப்புழு தாக்குதலால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டது. நடப்பாண்டு முன் எச்சரிக்கையாக தண்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து, வேளாண் துறை ஆலோசனை வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:மழை பொய்த்துள்ள நிலையில் தண்ணீர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது. அத்துடன் கூலியாட்கள் பற்றாக்குறை, இடுபொருட்கள் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு சிரமங்களுக்கு இடையே நெல் நடவு செய்தோம். தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தற்போது நெல் வளர்ந்து நிற்கிறது. களை எடுக்கும் பணியில் இறங்கி உள்ளோம். கூலி ஆட்கள் பற்றாக்குறையால் பெண்களுக்கு, 150 முதல், 200 ரூபாய் வரை கூலி கொடுத்து களை எடுக்கிறோம்.சென்றாண்டு நெற்பயிரில் தண்டுப்புழு தாக்குதல் ஏற்பட்டதால், வயல்கள் வெளிர் நிறமாக மாறி விட்டது. தண்டுப்புழு தாக்குதல் காரணமாக நெல் மகசூல் குறைந்து விட்டது. வேளாண் துறை சார்பில் முன்னதாகவே எச்சரித்திருந்தால், உரிய நேரத்தில் மருந்து தெளித்து, தண்டுப்புழு தாக்குதலை கட்டுபடுத்தி இருக்கலாம். அதுபோல், நடப்பாண்டு நிகழாமல் இருக்க, தண்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து வேளாண் துறை அறிவிக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## தேயிலை விலையில் தொடரும் வீழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,23:52 IST

குன்னூர் : குன்னூரில் தேயிலை ஏலத்தில் கடந்த மூன்று வாரங்களாக தேயிலை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது; ஏலத்தில் 5 ரூபாய் சரிவு ஏற்பட்டது.
குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில் நடந்த 25வது ஏலத்தில் 20.03 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 14.59 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.44 லட்சம் கிலோவும் இருந்தன.
இந்த ஏலத்தில் ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். உள்ளூர் வர்த்தகம் சுமாராக இருந்தது. இதில், 13.82 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனையானது. 5 ரூபாய் சரிவு ஏற்பட்டது. சாதாரண இலை ரகத்துக்கு சராசரியாக ஒரு கிலோவுக்கு 63-67 ரூபாய் வரையிலும், உயர் ரகம் 115 ரூபாய் முதல் 135 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. சாதாரண டஸ்ட்

ரகத்துக்கு 64 ரூபாய் முதல் 70 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 115 ரூபாய் முதல் 138 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக ஹிட்டக்கல் எஸ்டேட் சி.டி.சி., டஸ்ட் ரக தேயிலை தூள் ஒரு கிலோ 139 ரூபாய்க்கு விற்பனையானது. சாம்ராஜ் எஸ்டேட் ஆர்தோடக்ஸ் ரகம் அதிகபட்சமாக ஒரு கிலோ 210 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த வாரம் 69 சதவீத தேயிலை தூள் விற்பனையாகியுள்ளது. கடந்த வாரம் தேயிலை விலையில் 5 ரூபாய் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் வர்த்தகர்கள் கவலை அடைந்தனர். இந்நிலையில்,வரும் வியாழன் மற்றும் வெள்ளி கிழமை நடக்கும் 26வது ஏலத்தில் 21.14 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 15.54 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.60 லட்சம் கிலோவும் அடங்கும்.

## விவசாயிகளை ஏமாற்றும் பருத்தி வியாபாரி?

பதிவு செய்த நாள் : ஜூன் 26,2012,04:11 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமதுவிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ளதாவது:சேலம் மாவட்டம் நத்தக்காடு கிராமத்தை சேர்ந்த ஜோதிவேல் மற்றும் அவரது மகன் மணிகண்டன் ஆகியோர், பெரம்பலூர் மாவட்டம் ஆய்க்குடி கிராமத்தை சேர்ந்த சிறு விவசாயிகளிடம் கடந்த 10 ஆண்டுக்கும் மேலாக, பருத்தி கொள்முதல் செய்து வருகின்றனர்.கடந்த ஏப்ரல் 30ம் தேதி அன்று நடேசன் மகன் மணிவேலுவின் பருத்தி மூடைகள் ஏற்றிக்கொண்டு, அதற்கான தொகையை பருத்தி மூடைகளை விற்பனை செய்தவுடன் தருகிறேன் என தெரிவித்தனர்.தொடர்ந்து அவர்களிடம் ஃபோன் மூலம் கொடுக்க வேண்டிய ரூ.4 லட்சத்து, 48 ஆயிரத்து, 500ஐ கேட்டதற்கு, பணம் தர முடியாது எனத்தெரிவித்தனர். கடந்த மாதம் 21ம் தேதி ஜோதிவேல் வீட்டுக்கு சென்று பணம் கேட்டபோது தர மறுத்ததோடு, தகாத வார்த்தைகளால் திட்டினார்.

இதுகுறித்து, அப்பகுதியை சேர்ந்த கிராம பிரமுகர்களிடம் கூறியதை தொடர்ந்து, ரூ.2 லட்சத்து, 24 ஆயிரத்து, 500 மட்டும் அன்றைய தினத்தில் என்னிடம் அளித்தனர். ஒருவாரம் சென்ற பிறகு மீதித்தொகையை கேட்டதற்கு பணம் தர முடியாது எனக்கூறிவிட்டனர்.

இது குறித்து, கடந்த 6ம் தேதி அன்று மங்கலமேடு போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்ததன் அடிப்படையில், மாவட்ட குற்றப்பிரிவு போலீஸாருக்கு அந்த புகார் மனு அனுப்பபட்டுள்ளது.எனவே, பருத்தி விவசாயிகளை ஏமாற்றி வரும் ஜோதிவேல், மணிகண்டன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுப்பதோடு, விவசாயிக்கு கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகையை பெற்றுத்தர கலெக்டர் தரேஷ்அஹமது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## நாற்றுகள் மூலம் துவரை சாகுபடி : குறுகிய கால விதைகள் தேவை

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,23:19 IST

கம்பம் : நாற்றுகள் மூலம் துவரை சாகுபடி செய்யும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் குறுகிய கால விதையை பயன்படுத்த விவசாயத்துறை முன்வர வேண்டும்.
மானாவாரி காடுகளில் துவரை சாகுபடி செய்யப்படும். விவசாயிகள் பராமரிப்பிற்கென அதிக பணம் செலவழிக்க வேண்டியிருக்கும். விதைத்த விதைகளில் அதிகம் விளையாமல் போய்விடும். இதனால் விவசாயத்துறை தற்போது புதிய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய திட்டம் ஒன்றை துவக்கி உள்ளது.
அதன்படி மானாவாரி காடுகளில் விதைகளை விதைக்காமல், பாலிதின் கவர்களில் விதைகளை போட்டு வளர்த்து, 30 முதல் 40 நாட்கள் கழித்து, நாற்றுகளாக நடவு செய்கின்றனர். இதனால் விதைகள் வீணாகாமலும், அதிக மகசூலும் கிடைக்கும். இந்த திட்டத்தில் எக்டேருக்கு ரூ. 15 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. 8 இடங்களில் மாதிரி திடல்கள் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.
இது தொடர்பாக விவசாயிகள் கூறுகையில், " நவீன ரகங்களான கோ 3, கோ 5 ரகங்களை பயன்படுத்தினால், 3 முதல் 4 மாதங்களுக்குள் அறுவடை செய்து விடலாம். 5 மாதங்கள் வரை மிச்சமாகும். எனவே மாதிரி திடல்களில் இந்த ரக விதைகளை, நாற்றுகள் தயாரிக்க பயன்படுத்த விவசாயத்துறை முன்வர வேண்டும்' என்றனர்.

## இறைச்சி விலை உயர்வு : ஆடு வளர்ப்பு தீவிரம்

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,23:00 IST

கீழக்கரை : கறி விலை உயர்வால் கிராமங்களில் ஆடுகள் வளர்ப்பு அதிகரித்து வருகிறது.
கீழக்கரை,ஏர்வாடி பகுதியில் மீன் பிடி தொழிலுக்கு அதிகமாக வருவாய் கிடைப்பதால், வெள்ளாடு, செம்மறி ஆடு வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எடையை வைத்து ஆடுகளுக்கு விலை நிர்யணம் செய்வதால் எடையை அதிகரிக்க தீவனமாக சோளம்,அகத்தி கீரை வழங்கப்படுகிறது.
அசைவப்பிரியர்கள் அதிகமாக உள்ளதால், ஆடு விலை உயர்ந்து இறைச்சி விலையும் எகிறியுள்ளது.
கடந்த சில மாதங்களுக்கு முன் கிலோ 340 ரூபாய்க்கு விற்ற ஆட்டிறைச்சி தற்போது 400 வரை விற்கப்படுகிறது.

## கறிக்கோழி விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 25,2012,23:00 IST

கீழக்கரை : கடந்த சில வாரங்களுக்கு முன், கிலோ ரூ.110க்கு விற்பனை செய்யப்பட்ட கறிக்கோழி, தற்போது கீழக்கரை, ஏர்வாடி, திருப்புல்லாணி பகுதியில் ரூ.150க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கீழக்கரை கோழிக்கடை உரிமையாளர் பவுசூல் அகமது கூறியதாவது: மீன்களின் விலையுடன் கோழியை ஒப்பிடும்போது பல மடங்கு குறைவாக உள்ளது. விலையேற்றத்தால் விற்பனையில் பாதிப்பும் ஏற்படவில்லை.

உற்பத்தி குறைவால் குறைந்த எண்ணிக்கையில் கோழிகள் சப்ளை செய்யப்படுகிறது. சில நாட்களில் விலை குறைய வாய்ப்புள்ளது, என்றார்.

---

தினகரன்

## சேமிப்பு தானிய பூச்சிகளை கட்டுப்படுத்த இந்தியா- ஆஸ்திரேலியா கூட்டு ஆராய்ச்சி திட்டம்

பதிவு செய்த நேரம்:2012-06-25 10:19:56

கோவை: தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் ஜோனத்தன் கூறியதாவது: உணவு பாதுகாப்பு நம் நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியம். உலக வங்கியின் அறிக்கையின்படி இந்தியாவில் மொத்த உண தானிய உற்பத்தியில் சராசரியாக 11-15 சதவீதம் அதாவது 20 மில்லியன் டன்கள் அள வுக்கு அறுவடை பின்சார் இழப்பு ஏற்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் ஒரு வருடத்தில் உற்பத்தியாகும் மொத்த உணவு உற்பத்தியில் இது பாதி அளவாகும். காலநிலை, உணவு தானிய வகைகள் மற்றும் சேமிப்பு கட்டமைப்பை பொறுத்து பூச்சிகளால் மட்டும்3- 15 சதவீதம் இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால் தானியங்க ளை கையாளும் பல நிறுவனங்கள் சேமிப்பு தானியங்களில் பூச்சியை கட்டுப்படுத்த பாஸ்பின் என்னும் வாயுவை அதிகமாக நம்பியுள்ளன.

ஏனெனில் பாஸ்பின் மலிவாகவும் பயன்படுத்துவதற்கு எளிதாகவும் பல்வேறு தானிய வகைகளுக்கு உபயோக்கும் வகையிலும் மற்றும் எஞ்சிய நச்சு அபாயம் இல்லாததாலும்

அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
எனினும் சேமிப்பு தானிய பூச்சிகளில் பாஸ் பின் எதிர்ப்பு திறன் அதிக அளவில் காணப்படுகிறது. இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளில் உருவாகி வரும் மிக முக்கி பிரச்னையாகும். நீண்டகால தானிய சேமிப்பு பாதுகாப்பிற்கு இது மிகவும் அச்சுறுத்தலாகும். ஆகையால் பாஸ்பின் உபயோகத்தில் அதன் திறனை அதிகரிப்பதற்காக புதிய உத்திகளை உருவாக்குவது ஒரு உடனடி சவலாக எழுந்துள்ளது.
தமிழ்நாடு வேளாண் மை பல்கலைகழகமானது ஆஸ்திரேலியாவிலுள்ள குயின் ஸ்லாந்து பல்கலைகழகம் மற்றும் வேலைவாய்ப்பு பொருளாதார அபிவிருத்தி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் துறை ஆகியவற்றுடன் இணந்து இந்த ஆராய்ச்சியில் ஈடுபட உள்ளது.
ஆய்வுக்காக மூன்று ஆண்டுகளுக்கு(2012-15) மொத்த நிதி ஒதுக்கீடான 2.29 கோடி ரூபாயில் 1.07 கோடி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.
இத்திட்டத்தின் முதன் மை ஆராய்ச்சியாளர் மற்றும் பேராசிரியர் சந்திசேகரன் கூறுகையில், ''இந்தியாவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்துடன் மைசூரிலுள்ள மத்திய உணவு தொழில் நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், டெல்லியிலுள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தஞ்சையிலுள்ள இந்திய பயிர்பதன தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து செயல்படும். சிறந்ததொரு பாஸ்பின் எதிர்ப்பு திறன் மேளாண்மை முறைகளை இத்திட்டத்தின் மூலம் உருவாக்கியிருப்பதால் அதன் காரணமாக இந்தியாவில் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை நவீனப்படுத்த முடியும்.
தானிய சேமிப்பு நிறுவனம், பொது வினியோக முறைக்கும் இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும்,'' என்றார்.

## சாம்பிராணி இலைகளை எடுத்துசெல்ல வனத்துறை அனுமதி பெற வேண்டும்

பதிவு செய்த நேரம்:2012-06-25 10:37:48

குன்னூர்: வனத்துறையினர் அனுமதி பெற்ற பின்னரே சாம்பிராணி இலைகளை ரயிலில் எடுத்து செல்ல வேண்டும் என்று ரயில்வே எஸ்.ஐ தெரிவித்துள்ளார்.
நீலகிரி மலை ரயிலில பல ஆண்டுகளாகவே சாம்பிராணி இலைகள் கடத்தப்பட்டு வருகிறது. ஊட்டி, குன்னூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் தனியார் மற்றும் வனத்துறைக்கு சொந்தமான சாம்பிராணி மரங்களில் இருந்து அதன் கிளைகளை வெட்டி இலைகளை ரயில் மூலம் மேட்டுப்பாளையம் கொண்டு வருகின்றனர். பின்னர் அங்கிருந்து பிற மாவட்டங்கள், மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இத்தொழிலில் 50க்கும் மேற்பட்டோர் செயல்பட்டு வருகின்றனர்.
சாலைகள் வழியாக செல்லும் போது வனத்துறையினர் பிடிக்க கூடும் என்பதால் மலை ரயிலில்

சாம்பிராணி இலைகளை மூட்டைகளாக்கி எளிதாக அனுப்பி வருகின்றனர். முன்பு மறைமுகமாக நடைபெற்ற இத்தொழில் தற்போது பகிரங்கமாகவே நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக சாம்பிராணி மரங்கள் முழுமையாக வெட்டப்பட்டு வருகிறது. எனவே சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் புகார் கூறி வருகின்றனர்.

மலை ரயில் மூலம் சாம்பிராணி இலைகள் மூட்டை, மூட்டைகளாக எடுத்து செல்வது குறித்து தினகரனில் செய்தி வெளியானது. இந்நிலையில் மலை ரயில் மூலம் சாம்பிராணி இலைகளை அனுமதியின்றி யாரும் எடுத்து செல்ல கூடாது என்று ரயில்வே போலீசார் உத்தரவிட்டுள்ளனர். குன்னூர் ரயில்வே போலீஸ் எஸ்.ஐ சுபாஷினி கூறியதாவது: பார்சல் என்ற பெயரில் சாம்பிராணி இலைகளை மலை ரயிலில் கொண்டு செல்ல அனுமதிக்க கூடாது என்று ரயில்வே அதிகாரிகளிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. வனத்துறையின் அனுமதி பெற்ற பின்னரே கொண்டு செல்ல வேண்டும். இது தொடர்பாக வனத்துறை அதிகாரிகளும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளனர். இவ்வாறு சுபாஷினி தெரிவித்தார்.

சாம்பிராணி இலைகள் மலை ரயிலில் கடத்தப்படுவது தடுக்க போலீசார், வனத்துறையினர் கூட்டாக ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர்.